வேண்டுமென்று கருதுவீர்களேயானால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். அது நடக்காது. நாங்கள் ஒற்றுமையாக இருப்போம். பிரச்சினை அதில் இல்லை. காவிரிப் பிரச்சினையை தனியாகக் கொண்டு வாருங்கள். தனியாக விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தனியாக ஒரு விவாதம் வைத்துக்கொள்ள முதலமைச்சர் அவர்கள் நேரத்தைக் குறிப்பிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்செந்தூரில் வாடகைக் கார்கள் நிறுத்த இடம் கோரி மறியல் செய்தவர்கள் மீது தடியடி நடத்தியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து, குமரி அனந்தன், திருமதி ரமணி நல்லதம்பி ஆகியோர், ''24–4–1990 அன்று சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில், வாடகைக் கார்கள் நிறுத்த தனி இடம் ஒதுக்கக் கோரி மறியல் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தடியடித் தாக்குதல்கள் நடத்தியதால் அங்கே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் நகரத்தில் கடந்த 24–4–1990 அன்று வாடகைக் கார்களை வைத்திருக்கக் கூடியவர்கள் அந்த வாடகைக் கார்களை நிறுத்துவதற்கான தனியாக ஒரு இடம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கோரிக்கையை வைத்து, அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த மறியலில் ஈடுபட்ட வழக்கறிஞர் திரு. ராமமூர்த்தி அவர்களையும், நகர கம்யூனிஸ்ட் கட்சித் செயலாளர் வைகை ராஜு என்பவரையும் வட்டார கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சுடலை மற்றும் சிலரையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் காவல் துறை காவலர்களும் மிக மோசமாக அடித்து, அத்துமீறிய முறையில் பூட்ஸ் காலால் உதைத்து பயங்கரமான முறையில், தாறுமாறாகப் பேசியும் மிகவும் தவறான முறையில் நடத்தியிருக்கிறார்கள்.

11-20 மணி

அது மட்டுமல்லாமல், அந்த 40 வாடகைக் கார்களை, போலீஸ் நிலையத்திற்கே எடுத்துக் சென்றிருக்கிறார்கள். இது அந்த வட்டாரத்திலே, ஏற்கெனவே பல்வேறு கோரிக்கைகளுக்காக, இன்றைக்கு பொதுமக்கள், மகஜர்களை கொடுத்தும், அதிகாரிகளை நேரிலே பார்த்தும், கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலே, கடைசி ஆயுதமாக அவர்கள் ரோடு மறியலிலே ஈடுபடுகிறார்கள். அல்லது பஸ்ஸை மறிக்கிறார்கள் அல்லது கடைக்கு முன்னாலே மறிக்கிறார்கள். கடந்தக் காலத்திலே கூட தூத்துக்குடியிலே இருக்கின்ற மெயின் லைனிலே இருக்கின்ற ஆத்தூர் பகுதியிலே ஆயிரக்கணக்கான விவசாயிகள் தண்ணீர் வேண்டுமென்று சொன்ன கோரிக்கைக்காக இந்த ரோட்டிலே 2, 3 நாட்கள் மறியல் செய்தார்கள். அங்கு சென்று கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் கூட வேறு வழியாக திருப்பி விடப்பட்டன. ஆகவே, மக்களுக்கு இருக்கக் கூடிய கோரிக்கைகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு கடைசி ஆயுதமாக, நியாயமான, அமைதியான முறையில் நடத்துகின்ற இந்த மறியல் போராட்டங்களில் காவல் துறை மிகவும் மோசமாக நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அனைவரும் அவையில் கொஞ்சம் அமைதி காத்தால் உதவியாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளுக்காக உழைக்கிற மக்கள், அல்லது சாதாரண மக்கள், ஏழை எளிய ஏனைய மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை அரசாங்க அதிகாரிகளிடத்தில் சொல்கிற நேரத்தில், அது பல்வேறு காலங்களில் சொல்லப்பட்டாலும்கூட நிறைவேறாதபோது, இப்படி ஒரு கவனத்தை ஈர்ப்பதற்காக, மறியல் என்று சொல்லி, கைது ஆவதற்காக செல்கிறார்கள். அப்படி மறியலில் ஈடுபடும் போது காவல் துறையினர் செய்ய வேண்டிய கடமை என்ன? அவர்களைக் கைது செய்ய வேண்டும் அல்லது அவர்களுக்கு நல்லது செய்வதாக இருந்தால் நல்ல காரியங்களை செய்து, நல்ல வார்த்தை கூறி போராட்டத்தை நிறுத்த வேண்டும். ஆனால் அவர்களாகவே தடியடி நடத்தி, பூட்ஸ் காலால் உதைத்து மிகக் கேவலமாக, அந்நிய ஆட்சி கூட செய்ய கூசுகின்ற அளவுக்கு காரியங்களை செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக என்னிடத்தில் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள நகரச் செயலாளர், வழக்கறிஞர் அத்தனைபேரும் அங்கே மோசமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். 40-க்கும் மேற்பட்ட கார்களை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த வட்டத்தில் பதட்ட நிலை ஏற்பட்டு,

1990 ஏப்ரல் 26] [திரு. சோ. அழகர்சாமி]

வழக்கறிஞர்கள்கூட வழக்குமன்றத்தைப் புறக்கணித்து விட்டு, வழக்குமன்றம் செல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மோசமான நிலை. மக்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற அவர்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடு கிறார்கள். அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற் காகவோ அல்லது வேறு ஏதோ காரணத்திற்காகவோ சில அதி காரிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பல்வேறு இடங்களில் நடக் கிற போராட்டங்களில் அரசும், காவல் துறையினரும் இந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே, இது பற்றி அவசரமாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர் சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, திருச்செந்தூர் பகுதி யிலே, அந்த டாக்சி ஓட்டுநர்கள், தங்கள் வாகனங்களை நிறுத்து கின்ற இடங்களில், போலீஸ்காரர்கள் தொந்தரவு செய் கிறார்கள் என்பதால் தங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்கி தர வேண்டுமென்று அறவழியில் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில், காவல் துறையினர் அந்த வாகனங்களை எல்லாம் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுவிட்ட காரணத்தால் அதை அவர்கள் எதிர்த்து சாலை மறியலில் ஈடுபட்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட நிலைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

பல்வேறு நேரத்தில், டாக்சி ஓட்டுநர்கள் போலீஸ்காரர் களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைக்கு வண்டியை எடுத்து வா என்று அவர்கள் அதிகாரம் செய் கின்ற நிலை. இதனால் ஓட்டுநர்களுக்கு பொருளாதாரத்தில் பாதிப்பு. இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவர்கள்மீது காழ்ப்புணர்ச்சிக் கொண்டு அதை வெளிப்படுத்துகின்ற நிலையிலே காவல் துறை யினர் மிகக் கொடுமையாக அவர்களிடத்தில் நடந்து கொண் டிருக்கிறார்கள். இத்தகைய நிலை எங்கள் பகுதியிலே, பல பகுதிகளிலே பல காலமாக ஓட்டுநர்களிடம் காவல் துறை யினர் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, டாக்சி ஓட்டு நர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். அவர்கள் டாக்சிகளை எங்கு நிறுத்த வேண்டும். எப்படி நடந்து கொள்ள வேண்டும், அதுபோன்று உரிமைகள் பற்றி எல்லாம் முடிவு எடுத்தாக வேண்டும். காவல் துறையினர் தங்களுடைய தொழிலுக்காக செல்கின்றபோது கூட டிரைவர்களிடம் வண்டி யை எடுத்துவா என்று சொல்லி வற்புறுத்துகின்ற நிலை

இனிமேல் தவிர்க்கப்பட வேண்டும். இப்படி அராஜக நிலையிலே மிருகத்தனமாக, ஓட்டுநர்கள் பிழைப்பை நடத்த முடியாத அளவுக்கு அவர்களை அடித்து, நொறுக்கி இருக்கின்ற நிலையை கண்டிக்கின்ற வகையிலே அந்தப் பகுதியிலே ஏற்பட்டுள்ள கைதுகள் குறித்தும், காவல் துறையினரின் அடிதடிகளைக் குறித்தும், அங்கே பதட்ட நிலை நீடிப்பதால் இவைகள் பற்றி எல்லாம் அவசரமாக முடிவெடுக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-25 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்குள் டாக்சிகளை நிறுத்த ஒரு டாக்சி நிறுத்தும் இடம், வேண்டுமென்று திருச்செந்தூர் டாக்சி ஓட்டுநர் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி. கோரி வந்தது. அந்தக் கோரிக்கை குறித்து விவாதிக்க 24-4-1990 அன்று காலை 8-30 மணி அளவில் திருச்செந்தூர் வட்டாட்சியர், அவருடைய அலுவலகத்தில் அந்தச் சங்க நிர்வாகிகளோடு ஒரு கூட்டம் நடத்தினார். அதுதான் அவர் செய்த தவறு. கோரிக்கை பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் நடத்தினார். சங்க நிர்வாகிகள் அந்தக் கூட்டத்திற்கு வந்தார்கள். வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. முருகேசன், காவல் துறை ஆய்வாளர் திரு. .பாண்டி, டாக்சி ஓட்டுநர் சங்கத்தின் சார்பில் திரு சுடலை, திருச்செந்தூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர், திரு. வைகை ராஜ், டாக்சி ஓட்டுநர் சங்க முன்னாள் தலைவர் மற்றும் சங்க ஆலோசகர் வழக்கறிஞர் திரு. இராமமூர்த்தி ஆகியோர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். டாக்சியை எங்கே நிறுத்துவது என்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் சில நபர்கள் தங்கள் வண்டிகளைச் சாலையின் குறுக்கும், நெடுக்குமாக நிறுத்தி, வாகனப் போக்குவரத்தைத் தடை செய்து, சாலை மறியல் போராட்டத்திலே ஈடுபட்டிருப்பதாக காவல் நிலைய ஆய்வாளருக்குத் தகவல் கிடைத்தது. அதன் காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 24 பேர் கைது செய்யப்பட்டார்கள். சாலை மறியலுக்குப் பயன்படுத்தப்பட்ட 26 வாகனங்கள் பறி முதல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தத் தகராறுதான் இன்றைய தினம் இவ்வளவு பெரிய அளவுக்கு இந்த மன்றத்தினுடைய அலுவல்களை எல்லாம் ஒத்தி வைத்து விவாதிக்கப்பட வேண்டுமென்ற அளவிலே பேசப்பட்டிருக்கிறது. இதைச் சாதாரணமாக வட்டாட்சியர் தன்னுடைய அலுவலகத்திலேயே அவர்களை அழைத்துப் பேச முடிவு செய்து, அனைவரையும் அழைத்து, அனைவரும் வந்திருக்கும்போது, வந்திருக்கிறவர்களுக்கே தெரியாமல் வெளியிலே சாலை மறியல்

போராட்டம் நடைபெற்ற காரணத்தாலே இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி அவர்களும், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை மனதிலே கொண்டு, மேலும் அங்கே அமைதி நிலவவும், அந்த ஓட்டுநர் சங்கம் கோருகின்ற உரிமை நியாய மானதாக இருந்தால் அதைக் கவனிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர வர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படு கிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் திரும்பி வந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். இராமச்சந்திரன் ஆகி யோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள் ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் கள், தற்போது அங்கு நிலவும் சம்பவங்களினால் படிப்பைத் தொடர முடியாமல் தமிழ்நாட்டுக்குத் திரும்ப வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நமது நாட்டில் 17 வட்டார பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஸ்ரீநகரில் உள்ள இக்கல்லூரி 1960-ல் ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரி அம்மாநிலத்தில் நிலவிவரும் கிளர்ச்சியின் காரணமாக தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுவாக வட்டார பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களில் பாதி அந்தந்த மாநிலங்களாலும், மீதம் உள்ள இடங்கள் பிற